R4746

# THOSE WHO ARE REPROVED BY THE LIGHT

# வெளிச்சத்தினால் கண்டிக்கப்படுகிறவர்கள்

"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது." மத்தேயு 5:16

கர்த்தருடைய வார்த்தை நமக்கு வெளிச்சமாகவும் நமது கால்களுக்கு தீபமாகவும் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. ஆனால் இங்கே அந்த கருத்தில் சொல்லப்படவில்லை என்று தெரிகிறது. நாம் சத்தியத்தை பிரகாசிக்க வேண்டும் என்பதே அதன் பொருளாக இருக்கிறது. இந்த வசனத்தில் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் வகுப்பார் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்களைப் பற்றி தேவன் வேறொரு இடத்தில் அவர்கள் மூலம் சத்தியமானது மற்றவர்களுக்கு செல்ல அவர்கள் கவனம் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். மேலும் அவர்கள் முத்துக்களை பன்றிகள் முன் போடக்கூடாது. சத்தியத்தின் அனைத்து வெளிச்சமும் உலகத்தில் பிரகாசிக்க வேண்டும் என்பது அதன் பொருளல்ல. உலகமானது சகல சத்தியத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வெளிச்சம் என்பது வேறொரு இடத்தில் ஒளியூட்டுதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒளியூட்டுதல் சத்தியத்தின் மூலமாக மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதல் மூலமாகவும் வருகிறது. இவர்களது வாழ்க்கையில் பரிசுத்த ஆவி ஒளியூட்டும் சக்தியாக ஆகிறது. ஆகையால் அவர்களது முழு வாழ்க்கையும் பிரகாசிக்க வேண்டும். அவர்களது முழு வாழ்க்கையும், "அவர்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய" ஒளியை காட்ட வேண்டும்.

இன்னொரு வசனம் சொல்லுகிறதாவது: "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" இந்த வெளிச்சம் தான் அல்லது வசனம் தான், அவர்களால் சகல செய்தியையும் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தாலும் மனிதர்கள் மேல் பிரகாசிக்க வேண்டும். ஆனால் ஒரு சமயம் சத்தியத்தை வெறுத்த அநேகர் நம்பிக்கை கொண்டு தேவனுடைய பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் அவர்கள் உணர்ந்த ஆவியின் வெளிச்சத்தினால் கர்த்தரிடத்தில் வழி நடத்தப்பட்டார்கள். அவர்களுடைய மனங்கள் இருண்ட காலத்தில் புகையினால் வெகுவாக மூடப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் தேவனுடைய ஆவியினால் வழி நடத்த முடியாதபடி, நல்லிணக்கத்திற்கு வெளியே வெகு தூரத்தில் இல்லை. அவர் இயேசுவைப் பற்றிய அறிவைப் பெற்று அவரைப்பற்றி கற்றுக்கொண்டார்கள்.

உலகமானது சத்தியத்தை கர்த்தராகிய இயேசுவிடமிருந்தோ அல்லது அவரது சீஷர்களிடமிருந்தோ ஏற்றுக்கொள்ளும் என்று இதில் எந்த வசனத்திலும் குறிப்பிடப்படவில்லை. இருளானது அதை பற்றிக் கொள்ளாதிருந்தாலும், அவர் தமது வெளிச்சத்தை பிரகாசித்தது போல நாமும் நமது வெளிச்சத்தை பிரகாசிக்க பண்ண வேண்டும். சிலர் வெளிச்சத்தை எதிர்க்கிறார்கள். ஏனெனில் அவர்களது கிரியைகள் தீயவைகளாக இருக்கின்றன. எனினும் வேறு சிலரால் பல்வேறு விதமாக ஏற்றக்கொள்ளப்படுகிறது என்பதே இதன் கருத்தாக இருக்கிறது. ஆகையால் "நமது நற்கிரியைகளை மனுஷர்கள் காணும்படி நமது வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது." அவர்கள் இந்த கிரியைகளை சரியாகவோ அல்லது தீயதாகவோ எடுத்துக்கொள்ளலாம். சிலர் அதைப்பார்த்து மெச்சலாம். நமது கர்த்தரை எதிர்த்தவர்கள் பொது ஜனங்கள் அல்ல, தங்களை தேவனுடைய ஜனங்கள் என்று விசேஷமாக கூறிக்கொண்ட வேதபாரகர்களும் பரிசேயர்களும் ஆகும். அவர்கள் தங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தரநிலைக்கேற்ப வாழவில்லை. அவர்கள் கண்டிக்கப்பட்டார்கள்; இயேசுவின் போதனை ஒரு உயர்ந்த நிலையில் இருந்ததாக உணர்ந்தார்கள்.

இதே நிலைமையை இந்நாளில் நாம் காண்கிறோம். சத்திய செய்தியை மிகவும் எதிர்க்கிறவர்கள் சபை மூப்பர்கள், ஊழியக்காரர்கள், ஞாயிறு பள்ளி கண்காணிப்பாளர்கள் போன்றோர் ஆவர். சத்திய வெளிச்சத்தின் பிரகாசம் மற்றும் ஒளியால் அவர்கள் கண்டனம் பண்ணப்படுகிற அளவுக்கு தங்கள் சொந்த இருளில் தள்ளப்படுகின்றனர். அது அவர்களது சொந்த தரநிலையை மிகுந்த பாதகமாக காண்பிக்கிறது. அவைகள் நமது வாழ்க்கை முறையை உயர்ந்ததாக உணர்த்துகின்றன. பிறகு அவர்கள் பொறாமையால் நிரப்பப்படுகிறார்கள். யூதர்கள் இயேசுவை பொறாமையினால் பிலாத்துவிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் இருதயத்தில் மிகவும் தவறான மனோபாவத்தில் இருந்தார்கள்.

நம்மை வெறுக்கிறவர்களிடமும் அதே போல் இருக்கிறது. எனினும் ஒளியானது செல்வாக்கை பெற்றிருக்கிறது. சரியான போதனை எது என்பதை அவர்கள் அறியக்கூடும். சிலர் ஒரு நிலையை எடுப்பதில்லை. ஆனால் ஓரளவு பார்க்கிறார்கள். இயேசுவுடன் இருந்தவர்கள் சகல பாதகமான செல்வாக்குகள் இருந்தாலும், அவர்கள் இந்த வகுப்பினருடன் இணைந்தார்கள். அப்போஸ்தலர் பேதுரு நமது கவனத்தை ஈர்ப்பது போல சிலர் சந்திக்கும் நாளில் அவர்கள் இப்பொழுது சீஷர்களாக ஆகாமல் இருந்தால் கூட நமது நல்ல கிரியையை பார்த்து தேவனை மகிமைப்படுத்துவார்கள். முடிவில் முயற்சியானது முழு கிரியையும் வீணாகவில்லை என்பதை விளங்கப்பண்ணும். சிலர் இப்பொழுது கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். இந்த ஜீவிகளின் செல்வாக்கு எதிர்கால உலகத்திற்காக இருக்கும்.

கிறிஸ்து முழு உலகத்திற்கும் ராஜாவாக அறிவிக்கப்படு முன், தற்கால வாழ்க்கையில் கிறிஸ்துவின் சீரீ அங்கங்களோடு மிகவும் நெருக்கமாக தொடர்புடைய அனைவரும், மனித காரியங்களில் இந்த கனத்திற்குரிய இடத்திற்கு கர்த்தரால் தெரிந்து கொள்ளப்படுகிறவர்களில் குணலட்சணத்தின் கம்பீரத்தையும் மேன்மையையும் அடையாளம் கண்டுகொள்ளக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் இயேசுவோடு இருக்கிறவர்கள் என்ற அவர்களைப் பற்றிய அறிவை எடுத்துக் கொள்ளகூடியவர்களாக இருக்க வேண்டும்.